☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Accredited with "B+" GRADE by NAAC

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

NAAC "B+" GRADE

## சண்முகா கல்லூரியில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில், இளநிலை மூன்றாமாண்டு மற்றும் முதுநிலை இரண்டாமாண்டு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் கல்லூரியின் பணியமர்த்தும் அமைப்பின் மூலம் (Placement Cell) 15.03.2024 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை தாங்கினார், செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னிலை வகித்தார், பொருளாளர் **எ.ஸ்ரீதர்,** கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்,** முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்,** துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக உயிர் தொழில்நுட்பவியல் துறைத் தலைவரும் கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலருமான முனைவர் **எம்.கோபு** வரவேற்புரை வழங்கினார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் சென்னை, பெங்களூர், பாண்டிச்சேரி, கோயம்புத்தூர், திருச்சி, திருவண்ணாமலை ஆகிய பெருநகரங்களைச் சேர்ந்த **38** முன்னனி நிறுவனங்கள் கலந்து கொண்டன. இந்நிறுவனங்களைச் சேர்ந்த மனிதவள மேம்பாட்டு அலுவலர்கள் முன்னின்று நேர்காணல் நடத்தினர்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். இத்தேர்வானது எழுத்துத் தேர்வு, குழு விவாதம் மற்றும் நேர்முகத் தேர்வு என மூன்று கட்டமாக நடைபெற்றது. இதில் ALTRUIST TECHNOLOGIES PVT LTD நிறுவனத்திற்கு 43 மாணவர்களும், MICHAELS ACADEMY OF COMMUNICATIVE ENGLISH நிறுவனத்திற்கு 31 மாணவர்களும், OLA ELECTRIC TECHNOLOGIES PVT LTD (JOVEE HUMAN SOLUTIONS PVT LTD) நிறுவனத்திற்கு 11 மாணவர்களும், TATA ELECTRONICS PVT LTD (SRI HARI MANPOWER SERVICE PVT LTD) நிறுவனத்திற்கு 21 மாணவர்களும், SIMHO HR SERVICES PVT LTD நிறுவனத்திற்கு 181 மாணவர்களும், MGM DENTAL LAB நிறுவனத்திற்கு 05 மாணவர்களும், JK TALENT SOLUTIONS நிறுவனத்திற்கு 35 மாணவர்களும், UNITECH PLASTO COMPONENTS PVT LTD (VERTICAL SOLUTIONS) நிறுவனத்திற்கு 35 மாணவர்களும், FOXCONN HON HAI TECHNOLOGY (VERTICAL SOLUTIONS) நிறுவனத்திற்கு 45 மாணவர்களும், PROODLE INTEGRATED SERVICES SOLUTION PVT LTD நிறுவனத்திற்கு 190 மாணவர்களும், PROODLE HOSPITALITY SERVICES (P) LIMITED நிறுவனத்திற்கு 70 மாணவர்களும், DELPHI TVS (TEAMLEASE) நிறுவனத்திற்கு 95 மாணவர்களும், ASHOK LEYLAND (TEAMLEASE) நிறுவனத்திற்கு 15 மாணவர்களும், MOTHERSON நிறுவனத்திற்கு 33 மாணவர்களும், LEVIVAAN SOLUTION PVT LTD நிறுவனத்திற்கு 76 மாணவர்களும், IMARQUE SOLUTIONS PVT LTD நிறுவனத்திற்கு 46 மாணவர்களும், BOSTON BUSINESS SOLUTIONS PVT. LTD நிறுவனத்திற்கு 20 மாணவர்களும் ஆகிய 17 நிறுவனங்களுக்கு முதல் கட்டமாக மொத்தம் **947** மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மின்னனு அறிவியல்துறை உதவிப் பேராசிரியர் **டி.ஆனந்தன்** நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் அனைத்துத் துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும், அலுவலகப் பணியாளர்களும் மாணவர்களை வழிநடத்தினர்.

செயலர் மற்றும் தாளாளர்




JOB
FAIR
motherson